கௌளக்குறவஞ்சி

பதிப்பாளர்

க. செந்தில்ராஜா

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

கௌளக்குறவஞ்சி

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பாளர்
க. செந்தில்ராஜா

நெறியாளர்
முனைவர் ய. மணிகண்டன்
விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்லைக்கழகம்
சென்னை - 600 005.
ஆகஸ்ட் - 2007

"சுவடியிலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும்

பதிப்பேடு எண்: 53010630

நெறியாளர் சான்றிதழ்

ய. மணிகண்டன்,
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காக 'கௌளக்குறவஞ்சி' என்னும் தலைப்பிலான சுவடியை க. செந்தில்ராஜா அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(ய. மணிகண்டன்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

க. செந்தில்ராஜா
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் 'கௌளக்குறவஞ்சி என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(க. செந்தில்ராஜா)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

உள்ளடக்கம்

	பக்கம்
முன்னுரை	1-4
செய்யுள்	5-58
பின்னிணைப்பு	
செய்யுள் முதற்குறிப்பகராதி	59-62

முன்னுரை

பிரபந்த இலக்கியங்களில் ஒன்று குறவஞ்சி இலக்கியம். இது கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டு கால கட்டங்களில் தோன்றிய இலக்கியம். இதனைக் குறத்திப்பாட்டு எனவும் கூறுவர். தமிழ் இயல், இசை, நாடகம் என்ற கூறில் அமைந்தது என்பர். அவ்வகையில் இவ்விலக்கியம் நாடகத்திற்கு சான்றாக விளங்கக் கூடியதாகும்.

குறவஞ்சி இலக்கியம் என்பது பாட்டுடைத்தலைவன் உலாவின் போது தலைவி ஒருத்தி தலைவனைக் கண்டு காதல் கொண்டு வேதனையால் வாடித் தவிக்கின்ற தலைவிக்கு குறக்குலத்தினைச் சேர்ந்த குறத்தி குறி கூறுவதாக வரும் பொருளமைதியைக் கொண்டதாகும். இப்படியான பொருளமைதியைக் கொண்ட நூல்கள் பிற்காலத்தில் நிறையத் தோன்றின. தமிழில் தேன்றிய முதல் குறவஞ்சி திருக்குற்றாலக்குறவஞ்சி எனக் கருதப்படுகிறது. மேலும், பல குறவஞ்சிகள் தோன்றியுள்ளன.

குறவஞ்சி இலக்கியங்கள்

திருக்குற்றாலக்குறவஞ்சி, ஆதிமூலேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, நவபாரதக் குறவஞ்சி போன்ற பல குறவஞ்சி இலக்கியங்கள் கிடைத்துள்ளன. மேலும், அர்த்தநாரீசுவர், இலங்கணையார் குறம், சிதம்பரக் குறவஞ்சி, சோழக்குறவஞ்சி, பொய்யாமொழியீசர் குறவஞ்சி, மின்னொளியாள்குறம், முத்தானந்தார் குறவஞ்சி, மெய்ஞானக் குறவஞ்சி விதுரன் குறம் போன்ற பெயரளவில் கிடைத்த குறவஞ்சி இலக்கியங்களும் உள்ளன.

இந்த கௌளக்குறவஞ்சி என்னும் நூலினைப் பற்றி பெயரளவில்கூட இதுவரை பயன்படுத்தியதாக அறிய முடியவில்லை. இவ்வகையில் இந்த கௌளக்குறவஞ்சி என்பது கௌளமாபுரி என்னும் இடப்பெயரைக் கொண்டு எழுதப்பட்ட நூலாகும். இதில் பாட்டுடைத் தலைவனாக காசிவிசுவேசரைப் பாடப்பட்டுள்ளது.

கதைச்சுருக்கம்

காப்பு பாடலின் மூலமாக கௌளமாபுரியின் அழகினை விவரிக்கும் வகையில் அமைந்து உள்ளது.

பின்னர் இறைவன் காசிவிசுவேசர் பவனிக் கண்டு அரம்பையர்கள் அனைவரும் அவரழகைக் கண்டு ரசிக்கின்றனர். இவ்வாறாகவே தலைவியும் இறைவன் மீது காதல் கொள்கின்றாள். இதனால் அவளடைகின்ற வேத்னை இதனால் வருத்தமுற்ற நிலையில் இருந்தபோது, குறித்தி குறிசொல்லால், குறிசொல்லும் முன்பு குறத்தியில் மலைவளம், அங்கே உள்ள விலங்குகள், குறவர் இனச்சிறப்பினைக் கூறல், அவர்களின் வாழ்நிலை, மருந்துகள் பற்றியும் அதன் பயன்பற்றியும் கூறுதல். சிங்கன் - சிங்கி உரையாடல், களவி மற்றும் வாழ்த்துப்பாடல் என முடிகிறது.

யாப்பமைப்பும் மொழியமைப்பும்

இந்நூலினை ஆ.சு. சிவபிரகாசம் பிள்ளை என்பவர் 1933ல் சுவடியிலிருந்து தாள்சுவடியாக எழுதியுள்ளார். இதில் சிந்து, விருத்தம், வெண்பா, மட்டுவிருத்தம், கலிப்பா, கண்ணி முதலிய பல பாவினங்களும் தரு, சங்கரபாரணம், பூரிகல்லியாணி, அகவல், புன்னாக வராளி, தருவதம் எருசக்கலை கம்போதி, மத்தியமாதி சிந்து, நொண்டிசிந்து பந்தவாடி தரு, ஆனந்தபைரவி பதம், தருச்சொல்லு, ஏசல் தரு, சோதனைச் சிந்து போன்ற பல கீர்தனைகளும்

அமைந்துள்ளன. பாவினங்களில் யாப்பு மிரட்சியாகவும், வழுவமைதியாகவும் வருகின்றன. மேலும் குறவஞ்சி இலக்கியங்களில் இந்த நூல் யாப்புகள் அதிகமாகக் கொண்டு அமைந்த நூல் எனலாம். இது இலக்கிய உலகிற்கு ஒரு புதுவிதமான குறவஞ்சியாக கருதலாம். மொழிநடை பாடல் அமைப்பிலும் உரையாடல் அமைப்பிலும் எளிய நடையில் உள்ளது. சில வட்டார வழக்குச் சொல்களும் பயன்படுத்தப்படுள்ளது. இவ்வகையில் இது ஒரு சிறந்த குறவஞ்சி இலக்கியமாகும்.

கௌளக் குறவஞ்சி

ஓம்

சிவமயம்

கௌளக்குறவஞ்சி

ஹரி ; ஓம்

காப்பு

வீதிகள் வீதிகள் தோறும் செப்பமிடுவார்
    மேடுபள்ளம் நிறவி கோடொப்ப மிடுவார்
மாதர் திண்ணை மெழுகியே கோலமிடுவார்
    வாழை தென்னை கரும்பு கமுகு நாட்டுவார்

எங்குமெங்குங் கொடி தோரணங் கட்டுவார்
    இடர்க்காய நல்கொடி தழையிடை கட்டுவார்
தங்கமணிச் சுவற்றில் சித்திரம் வரைப்பார்
    சந்திரன் சூரியன்போல நிலக்கண்ணாடிப் பாதிப்பார்
மாங்காய் பொன்புருணாகாம் பாங்கன் பதிப்பார்
    மறையோர் நவதாணியப் பாலிகை விரைப்பார்

விருதின் பஞ்சவர்ணப் பாவாடை யறிவார்
    வீட்சி மலர்ப்பந்த லொருலெட்சம் நெறிப்பார்
பருதி போலவே நீலத்தேர் மீட்டுவார்
    பவளத்தூணிடைமுத்துச் சரமுங் கட்டுவார்

சோதிடதீபம் பலர்பாலர்
சோகையாகவே வைப்பார்
தோகையார் பன்னிர் செறுத்து செந்தூரங்களைக்
குழைப்பார்
வீதியிலாடவர் மேலே வாரி யிறைப்பார்
வீனை னாரேச மதந்தெருனள னீறைப்பார்

மாதரலங் காரமுடன் குழல் முடிப்பார்
மாடமாளி மேடைநீ டெங்குமே னடிப்பார்
ஆதலருக் கன்னசத்திர சாலை போடுவார்
அன்புட னெங்கெங்குத் தண்ணீர்ப்பந்தல்
போடுவார்

சீதமதிகாரன் விசுவனாதன்வரும் பவனியைத்
தெரிசிக்கப் பலப்பல செனம் வருவார்
ஆதிமறை யோர்வார் கௌளபுரி மகிமை
அலங்காரம் சேடனால் சொல்லவொன்ண்
ணாதன்றே.

கலிப்பா:

நாரண னயன்றுதின மென்னாள் பாவதிரு வருளின்
பூரணமின் கௌளமா புரிபிர காசவி சுவேசம்
ஆரணியமிங் கொங்கை விசாலாட் சியுடனே பவனி
மேரினை றின்திரு வடியின்மீ தில்வரலா கினாரே

சங்கராபரணம்:

பல்லவி:

அவனி மகிழ்பவனி வாருதல் பாரும்
ஆட்சியாம் விசாலாட்சி அம்பிகை யுடனே
(அவனி மகிழ்)

சரணம் 1:

அருள்மெய்ப்பான வருணை காசியிது வெனவே
அரகர வெனவே உலக லோகமொடு
அகந்தமா விரதம் மிகந்த சேனைதொழப்
பசந்திடுங் காரியும் மிசந்த தங்கமயம்
ஆடல்மிஞ்சு சகடோர்கள் புணர்ந்து வரவே
(அவனி மகிழ்)

(குறம்)

அணியணி வச்சிரம் மணிபணி அச்சிதம்
அகிழ்விக டத்தாடை மிகும்மத டச்சடை
அருணப் பறவையொளி இரணச் சுடரொளி
அளகது அழகிய வொளிவைப் பெறுமுகம்
ஆயிரம் பைங்கொடி திவாகர னாடுத
ஆசல மாமென பூவய னோடு
அருமை வரிதுடை துடிமமுழ விரிப்புடை
அணிகை கொண்டிருகை அவனிய மாடும்
ரெம்பை ரசமுடனே (அவனி மகிழ்)

சரணம் 2:

அடிதொழுதால் கொடியர் பாவினையெல் லாந்திரும்
நவநிதிமுதல் பாலர் பாக்கியமெல் லாம்சேரும்
நரசென்ம மாத்தில் மாறர் பாதசேர்வை வந்துசேரும்
மேளங்கொம்பு பூரிகை விரணம் முழங்க விருது
துத்திகுழல் பேரிகையுடனே மேளங் கொம்பு
விருசு வானவகை துருசு வானிறவி
மிகந்து மெண்ணுகில் புகந்து விண்ணவரை
வீரிட்டிடும் சேகையும் யீரிட்டுடு பூகையும்
மேகவோ சைவெடி நாகலோக மதிர
மேளங் கொம்புபூரி வேதியர் மங்கள கோஷமுழங்கிட
வீதியில் மிகுந்த தீப மிகுந்துடன்
விடய கொடிபல விதடக் கயமுடன்
நிடய கொடிதழை புசித்திட வரும்
இந்திர தேரன கம்பம் மந்திரபுரண கும்பம்
எங்கு முலாவவே மடமங்கையர் நடமாடியே
வெண்சா மரம்பல பதம்பாடு வர்சிலர்
வீணை கீதவகை முகவீணை னாத சுரமுடனே
மேளம் விரதமுடன் னாடியார் பணிவிடை செய்துறங்க
காளகண்ட முந்திரு னேத்திரமும் விளங்க
காசிவிசு வனாதர் கண்டவர்க் கருள்வழங்க.

(அவனி மகிழ்)

கலிப்பா;

பரசுப் பிரகாச விசுவனாதர் பவனிவர
தெரிசிக்க வேமருவும் திருபுவனத் திலுள்ளவரும்
வரிசைமட வார்பலரும் வாலுவரி வாறுதிக்
கருடன் சரசமுடன் கௌளமா திருநகரில் சேர்ந்தனர்.

மட்டு விருத்தம் ;

செந்திருவாழ் கௌளமா புரத்தில் மேவும்
சிவகாசி விசுவேசர் பவனி காண
விந்தைபெறு மரம்பையர் கள்வடிவே யெல்லாம்
மிகத்திரட்டி வேதனொடு வடிவமாய்ச் செய்த
சந்திரமுகத் தழகும் விழியழகும் மார்பில்
தனத்தழகும் யிடையழகும் சரீரகாந்தி
சந்திர மன்மத கோளில னிதமான
சுரத மோகினி வந்து தோன்றினாளே.......

பூரி கல்லியாணி;

சுரத மோகினி வாராள் - பாரய்யா
வரதர்கா சிவிசுவேசர் வரும்பவனி காணவே (சுரத)

முத்து மோகன வேளக் கபரஞ்சிக்- கலவி
வித்தை விருது கொண்டு சித்திரமிஞ்சி- வஞ்சி
தத்தை போலவே கொஞ்சி சரசம்நதி யில்மிஞ்சி (சுரத)

தங்கவடி வாமிவள் முககுயம் காட்டல்
செங்கையோ பார்வை ஆரம்பம் - யிவள்
அங்கம்பொன் துடைக்கரம்பம் ஆனசந்திர பிம்பம்(சுரத)

தானிசை குழைகோதி முடித்துமே - செங்கை
வெத்தி லைக்கிழி மடித்துமே - கரம்பை
தானாக நடித்துமே சகியோர்கை பிடித்துமே (சுரத)

இன்னிசை இறுத்தி கௌளபுரிவாசர் - தேவி
விசாலாட்சி மீதில்மயல் பொறும்நேசன் - யீசன்
சுசிகாசி விசவேன் யிசைபூசை மிசையாசை (சுரத)

கலிப்பா;

பாரும் காசிவிசு வேசர்மேவும் பவனிமிக
தூரும் பெண்களுட னேசுரத மென்னொடியாள்
காரும் கூடந்தலும் கைவளை சோரதலைநெகிழ
வாரும் கொங்கை விம்மும்மய லாகினளே.

தரு;

மயங்கியதோர் மோகினியே - மட
மங்கை யோர்புடை னின்றுமே
குயங்கானிலே தழுவிக் கொண்டு
குழல்திருத்தி மடியில் கொண்டு

பாங்கியர் கைதான் பிடித்து
பணங்கிழி யைத்தா ணெடுத்து
மதிமுக வேர்வையைத் துடைத்து
யென்னயிதோ மாய மென்ன
யென்றீங்கிது புதுமை யென்ன

வன்னமுலை வாரணமே
    மான்மயங்கா காரணமென்பார்
கண்ணுறு பட்டுதென்பர்
    காமதெய்வந் தொட்டுதென்பார்
வெண்ணீறு பூசுமென்பார்
    மயில்விசிறிகொண்டு வீசுமென்பார்
மயக்கமிதோ போடுதென்பார்
    மந்திரவாதியைத் தேடுதென்பார்
வயித்தியானாப் பாடுதெமன்பார்
    ஒருமருந்தைக் கொண்டு வாருமென்பார்.
வனத்தெய் வங்கள் சுத்து தென்பர்
    மங்கிலியப் பெண் கடத்து மென்பார்

தனத்தே மிடிக்குதென்பார்
குட்டிச்சாத்தான்
தொட்டு நடக்கு தென்பார்
ஆடுகொண்டு சுழற்று மென்பார்
ஆந்தைகிள்ளை வாழுதென்பார்
காடுமேடு பெற்று தென்பர்
ஒருகழிப்பூங்கா தோணுதென்பார்.
கோடிகொடி நில்லு மென்பார் - தாய்க்கிழவிக்
கோடிச் சொல்லு மென்பார்.
பாடினியோர் வாடுதென்பார்- கொஞ்சம்
பாலன்னங் தானூட்டு மென்பார்
பதறாமல் பாருமென்பார்
பசுங்காளைதான் தீருமென்பார்
சீதாராமனார் காசிவிசு நாதரின்று காவலென் பார்.

வெண்பா

காவல் சிவனெனவே காப்புந் திருநீறும்
மேவியிட்டு பத்திருக்கும் வேளையில் - ஆவலுடன்
சிலாக்கி யமானாள் சுரததார்க்குழ லைத்தேடி
தாய்க்கிழவி வந்தாள் தனித்து.

தரு

நறைத்த தலையும் துளிற்றிதான முலையும்
நாக்கும் குழறிவுளறியே யினறா யிரும்பல
எளப்பு மண்றியே யெழுமிக் கிழவி தோன்றினாளே

வளைந்த காலும் குழைந்த நடையும்
வாய்க்குள் யெச்சை பார்க்கவே
படிமஞ்சாட்டி முகதாழி வயத்தி
பாட்டி கிழவி தோன்றினளே
கூனிகூனி கோலையூனி கொசுகரிற்றகண் பூனைமுடியே
மானின் கூனிமகளைத் தேடிப்
பொக்க வயக்கிழவியுற் தோன்றினளே
முன்செல்லும் வார்த்தை பின் தெரியாமல்
பேயனைப் போலவே திரியும் பெண்ணவள்
சொன்னத்தை சொன்னத்தை
சொல்லிக் கொண்டே திரியும்
வயது கிழவி தோன்றினாளே.

வெண்பா

தோன்றிடும் கிழவி சுரிற்ற முலைமார்பில்
ஈன்ற மகளை யெடுத்தன்று - ஊன்றிமயலாற்
மான்சுரதமோ கமயங்கிய பெண்மோகினியும்
குயிலோடு
தான்மொ ழிவாள் கனிந்து.

தரு

என்னுயிரே மின்னரசே- வன்மையல் கன்னியரே மகளே
உன்னை யெங்கு மோ டிதேடிதேடி நாடிவாடி வந்தேன்
மகளே.

வன்னமேடை மீதில் சப்பிரமஞ்ச மீதில் சயனிக்கு
மெந்தன் மகளே.
தெருப்புழுதிக் காத்தில் தேடத்தேற்றும்
நித்திரையாயிற்ருச் தேனடி மகளே.
வேனு முகவிணை சுரம் காணும் ருத்திர
வீணைவானிமகளே
இருந்த வீதிமீதிலோதி மோதும் சேதியேது வோதுவாயடி
மாகளே
காணுந்தங்கத் தூணெனவே தோணுந்துடை யென்விழி
மகளே.
களங்கமனை யென்றளிந்து மடிந்து
கலங்கி மயங்கிக்கிடந்த தென்னடி மகளே
குங்குமமும் சந்தனமும் கொங்கைதன்னில்
தங்கியத்தேன் மகளே யிப்போ
குறுந்துடன் வளைசோறுந்துடன் கலைவாறுற்துடன்
எடல் னெருந்த தென்னடி மகளே.
எங்கு மெத்தை தன்கீழிலொரு
பொடி கிடக்கிலே அதுயேதடி யென்பாய் மகளே-
யின்று
புழுதியுடலில் முழுதும் படக்கன்
சுழல்வ தென்னடி ணாழமில்லையே மகளே
சூதுமுலை மாதருடனே பொதும கீதம்
மோது மெந்தன் மகளே- நான்தான்
சூளுகொண் டென்னுடன் மறுத்தொரு மொழி
உறுக்கிச் சொன்னாலும் பொறுத்துக் கொள்ளடி
மகளே

நூதரெனும் பிரகாச விசுவேச
நாதர் விசாலாட்சியுடன் மகளே- உனக்கு
தளறா கிருபை வளர்த்திடவே
செழித்த திருபுளந்துணையினி மகளே.

விருத்தம்

இப்பல வசனஞ்சொல்லி பின்னுங் கையால்
மோகினியை யெடுத்தனைத்து மார்பில் சேர்த்து
யிருந்த வேலையில்
செப்பிள முலையார் அவரரவர் மனையில்
சென்ற பின்பு சுரத மோகினியும்
கொப்பள மெழவே வெங்கனை யுடலில்
கொண்டு விசுவேசனை நினைத்து
வெப்புளம் கனல் போல் யெழுந்த வெண்மதியை
வினவியே தனிறிருள் துரையாள்.

தரு

விற்கமனே யென்றநீதான் - வெண்ணிலாவே
மெத்தவும்
கொதித் தொழுந்தாய் வெண்ணிலாவே
ஒருவர் தானுந் துணைகாணேன், வெண்ணிலாவே -
யென்மேல்
ஒட்டரம் யித்தனையோ வெண்ணிலாவே.

அருமருந்தாகினேனா னென்றாய் வெண்ணிலாவே-
என்னை
அனைத்தால் நீயென்ன செய்வாய் வெண்ணிலாவே
மெத்தை மீமில் யிருந்து மெந்தன் குத்துமுலை
சேருமவர்
சித்தம் வரவென்ன செய்வாய் வெண்ணிலாவே
சிந்தனை மேல் யென்மேலவர்க்கு உத்தது சொல்லவரு
- மத
நத்துனு மிங்கில்லையே வெண்ணிலாவே.

வறம மின்னெற மவர். சேர்வர்மாலே- அங்கே
ஆரோ கைவசங் கொண்டாள் வெண்ணிலாவே
கெளளபுரிவாசர் சேரும் பிரகாச விசுவநாதர்
கூடுஞ்சடைமேல் வளர் வெண்ணிலாவே

விருத்தம்

நலமிகுந்த காசிவிசுவாச நாதர்மே லாசைகொண்டு
உலகமெழுகா கியவுள்ளம் உருகியஉடை தளர்ந்து
பலபல மொழிமறந் தேஅன்னம் பால்பழம்
அருந்திடாமல்
கலைமதிதன் னைநொந் துகாமனை வெறுக்கின் றாளே.

தரு

மோகமானே னென்றே நீதான் மன்மதனே
முல்லை மலரைத் தொடுத்தாய் மன்மதனே
அகமெல்லாம் வாடி நொந்தேன் மன்மதன் - அமு
தன்னமும் தெகுட்டுதய்யோ மன்மதனே
சோக மோகமிக வானேன் மன்மதனே
சொல்லுவார்க்குடம் பெடுத்தேன் மன்மதனே
மகாவிசுவாச நாதரின்று மன்மதனே
வந்தனைத்தா லென்ன செய்வாய் மன்மதனே

மட்டு விருத்தம்

செந்திவாழ் கொளளமா புரத்தில் மேவும்
சிவகாசி விசுவேசர் தம்மை பற்றிவாடிப்
பந்துமுலை விம்மிவிம்பி முகமுங்கோ
மாதர் தம்மை பதற்றி வாடி
நெந்துடல் தளர்ந்து வுடத்தலை சோலை நோக்கி
நோக்கிச்
சந்திரனை மன்மதன்ன வைய்து வைய்து
குயிலினுடனே வேறு கூடத்தானுத்தாளே.

தரு

கூவாதே கூவாதே குயிலே - உன்னைக்
கும்மிட்டுப் பணியுறேன் குயிலே
பாவி மதிக்கு முனக்கு மெனக்கும்
பழியேது பகையேது குயிலே
ஆவி சருகானேன் குயிலே - எனக்
காருந்து ணைகாணேன் குயிலே
தாவிவிடை யேறும் காசிவிசுவேசர்
தழுவினா லென்செய்வாய் குயிலே
தென்மலை செனித்தாயே தென்றலே - யான்
தேரை யிழுத்தாயே தென்றலே - எம்மை
காசிவிசுவாச நாதர் மீதில் - நன்மை
நான்கொண்ட தறியாயே தென்றலே
பொன்னிறமாகிய வானைபலர் முவில்
சோகமருவு மவனே - எம்மை
காசியீசர் விசுவநாதர் அருகில் - தூது
நாடிநாடி வாவென்றே
பஞ்ச வர்ணமான கிள்ளையே - நல்ல
பால்பழந் தருகின்றேன் கிள்ளையே
அஞ்சுமுகர் காசியீசர் சபையில்
கொஞ்சி அழுதுக் கூட்டிலா கிள்ளையே.

விருத்தம்

கிளிமதனன் குயில்மிதியின் தனதுடனே
மனம்விர குடனேகே தமோதி
வளர்திரு கௌளபுரி யில்வரும்
விசுவேசரை மயலாகி வருந்துயிரா
முருகுங்கவ லைதவிர்த் தருள்விவாங்குறி
மகிழ்வா யோதன வேவென
நளினமிகும் சரசுவதியாள் ஒருகுறமான்
வடிவெ வேமகி ழினரே.

ஞான துதி அகவல்

நடம்புரி யீசர் இடங்கை வாசர்
நாதந் தப்பரன்வேதாந் தத்திறன்
கொடியோர்க் குருத்திரன் அடியோர்க்கு மித்திரன்
குலத்திரி வளற்றோன் புரந்தனை அசைத்தோன்
மாதுமை தனக்கு பாதிமெய் யளிப்போன்
மனனமே குறிப்போன் ரசேனை வேரறுப்போன்
பாருளர் பரவும்கௌள புரியில்பத் தரனால்வித்
தரவேதற்
முத்தினல் வேதர் மும்மூவிரு சாத்திரமும்
பதிணெண் புராணம் பலகலை யெல்லாம்
நித்திலன் தானம் நீடக்கினி கோத்திரம்
வறுத்துணை நாகவாளர்க் குமாம றைறோர்

பக்திறாற்த் தினமும் பணியவே காக்கும்
கறுத்தனா மெங்கள் காசிவிசு வேசர்
மோகமாஞ் சுரத மோகினி மகிழ்ப்
பாகமாங் குறியே பன்னியே மொழியாள்
காரின் கோதண்ட கூர்விழி கொண்டை
கமல நேர்முகத்தாள் அழுவதாய் சுகந்தாள்
வள்ளையே குழலாய் கிள்ளைபோல் மொழியாள்
வத்த விற்புருவம் சிற்றிர வுருவம்
கழுகு நேர்கழுத் தாள்கனக பூஷணத்தாள்
இருகுட தனத்தாள் இரதிதனை நினைத்தாள்
அரிய சிற்றிடையாள் உரியகறுப் புடையாள்
பொற்கலங் கீரைவற் றினபஷ்பம்
வற்றிடும் ரோமம் பெற்றிடுமான் குலத்தாள்
கதலி துடையாள் கமலத் தடியாள்
இத்தனை வடிவம் பெத்த பொற்துடையாள்
கொங்கையைக் குலுக்கி செங்கையை முடுக்கி
அங்மே மினுக்கி பொங்கமே துலங்கி
உரைத்த சாத்திரசொல் கருத்துள் மாற்றிச்சொல்
புள்யனயை மார்பில் குள்ளுற வரித்தும்
எண்ணையும் சங்கும் யிசைபல கலையும்
திண்ணபாங் கற்றியும் சேர்க்குறக் கூடையும்
கன்டின பூவினத்த தோன்றின தாலியும்
மயிலெனும் கொப்பும் உயிர்மலை வெப்பம்
கொட்டையும் யிடைக்கிடை காட்டின பாசியும்
பட்டுடை யிடைக்கே ஒட்டிய மணியும்
சங்குட னணிந்து சிங்கியாம் விரல்

அமுங்கு மோதிரமும் துலங்கவே புனைந்து
காலில் வண்டையும் கல்லென்றதிர
நாலு வீதியும் நடந்தடி யிட்டு
முக்கலத் தோடுமீர் காலத்தனையும் கைபார்த்
துரைத்தும்கருத் தளிவித்தும் தெய்வகக் குறத்தியாய்
செப்பவந்தனளே.

குறவஞ்சி தரு

குறத்தி வந்தாள் குற்றறிமலர் மலரினிறுத்தி
மொழிகூறி யுறத்தி யிரைமிகும் சிறப்பினாள்
சிறுத்த நூலுடை வெறுத்த பூண்முலை
கறுத்த வேல்விழி திரத்தினாள்- (குறத்திவந்தாள்)

குத்து மாமுலை முத்து மல்லிகை
வற்ற வொளினள் விசித்தி ரமாய்
தத்தை போல்மொழி யொற்றி யாகவே
சத்தி யாயிங் குறிவித் தையாள்
கொண்டை யும்விழிக் கொண்டையும் விச்சிரத்
தண்டையுாங் காலில் தண்டையும்
மண்ட லாதிபர் கண்டு வாழ்வையும்
கொண்டு மேல்குறி விண்டு தான்
போதமா முனியா திவேரெப்
போதுமே துதிபர தர்ம
கீதர் நீதர் வினோதர் காசிவிசுவர்
நாதர் மேல்துதி யோதியே (குறத்தி வந்தாள்)

வெண்பா

தூதினங் குழல்சுரதய் யவிடம் தேடிவிசுவ
நாதர் சரண மலரைப்- போதும்
மருண்ட விழியாள் குறவஞ்சி வரவிலாம்
மிரண்டுசிந்தாய்சொல்லு வோமினி.

வஞ்சி தரு

வஞ்சி வந்தாள் சொகுசுடன் வஞ்சி வந்தாள்
வஞ்சி பரிமள வந்தி யிசைமிசை
கொஞ்சி அன்ன நடைமிஞ்சியே
வஞ்சியே யெனது குஞ்சி அழகிது
கஞ்சி வாவென்று கெஞ்சிய - (குறவஞ்சி)
மருவு மென்றகு ழல்புருவ மென்றவிழி
சுரத யனமிகும் அருவையாள்
இருகை வளையாது முரலவரும் தானா
அருகில் அவர்மன துருக வேநேச (வஞ்சி)
கொங்கை மூடியே காட்டியே - குழை
மூட்டி யேவிழி நிட்டியே
குறிக ளானது பலித மாகவே
கொஞ்சி யேபா ராட்டியே (குறவஞ்சி)
செங்கை வளைதன் னைனாட்டியே
நூதல் கோட்டி யேவிழி புரத்தில சர்கிருபை
தேட்டும் நடுவட்ட னாட்டிறே - (குறவஞ்சி)

வேறு - தரு- புன்னாகவராளி

பல்லவி

வந்தாள் வந்தாள் பாரும் பாரய்யா
வந்தாள் வந்தாள் பாரய்யா.
குறவஞ்சி மிஞ்சும் நெஞ்சு தாத்துடன்
(வந்தாள் வந்தாள்)

சரணம் 1

பெருகுங் கைக்குறி பார்க்கவே தினம்
பிரிந்த கணவரைச் சேர்க்கவே
அருகில் வரவு வரிக்காக்கவே யொய்கள்
ஆசை மோகினிச் சேர்க்கவே (வந்தாள்)

சரணம் 2

குத்துமுலை ரெண்டும் குலுங்கவே- நல்ல
கோல் மேணி துலங்குவே
மெத்த மோகினி மலங்கவே மதன்
வெகுண்டு மிகவும் கலங்கவே - (வந்தாள்)

சரணம் 3

அழகா மிசைமலர் சூட்டியே யெங்கு
ஆனகுறி சொல்ல நாடியே
தொழுது தெய்வம் கொண்டாடியே அந்தச்
சுரதவஞ் சியைத் தேடியே (வந்தாள்)

வெண்பா

வந்த குறவஞ்சி வனத்தில் யெங்குமே
சந்தமிக வானகுறி தானுரைத்தும் - விந்தையாய்
அருள்கொ டுவாயுர்கௌள புரத்தில்மேவி
தரவளமை குறவளே தான்.

சிந்து

நாடெல்லாம் அட்ட மங்கள கோடியும்
நகரெல்லாந் தெருவாசல் விசாலம்
வீடெல்லாம் அண்ண தானம் - விளக்கும்
விளையும் கன்னல் வயலெங்கும்
கேடெல் லாம்மணி யாரம் கொழிக்கும்
நீடெல்லாம் சிவகாசி விசுவேசர்
நிதியம் வாழ்நடு வட்டம் நன்னாடே
வாசந்த மண்டபம் சாரணர் வாசல்
கூட கோபுரமும் மதன்னீடும்
கொடுங்கை மாளிகை தோரன வீதி
ஆடல் சாலை அரங்கொடு பூஷ்பகம்
ஆனவீதி அரமனை வாசல்
நீடவே சிவகாசி விசுவேசர்
நித்தியம் வாழ்நடு வட்டம் நன்னாடே
காரெல்லாம் முகில் தன்னிடஞ் சேரும்

கவ்வை தானும் மரத்தலை சாயும்
தூரெல்லாம் முகில் தன்னிடஞ் சேரும்
சிரெல்லாம் அர வந்தனை சேரும்.
துட்டு தானுமொரு திடர்க்கூரும்
ஆறுசேர் சடையார் விசுவனாதர்
அருள்மிகுந் தாளன்நா டெங்கள் நாடே.

எல்லை என்பதும் பெண்கள் யிடைக்குள்
இடைச்சல் என்பதும் சோலை நெருக்கும்
கல்லை யென்பதும் கொடுத்தால் யார்க்கும்
கலக்க மென்பதும் வாரியில் சேரும்
தொல்லை யென்பதும் வியாகர ணப்பொருள்
தூடனுஞ் சொல்லோடு சொமபுப் பாளம்
எல்லோர் புகழ்காசி விசுவேசர்
இசைந்து வாழ்சடு வட்டம் நன்னாடே.

கலிப்பா

நாட்டுனிற் செல்லிநடந் துவந்த குறமகளும்
மேட்டிமையாங் காசிவிசுவே சரை வாழ்த்திமூடுமயல்சுர
மோகினி தன்வாசலி லேதாட்டிக மாய்நின்றுமனை
தான்பார்த்து வாழ்த்து வாளே.

தரு

தங்கநவ ரெத்தின் வொளி- அம்மே
    தளதளெனும் வாசலிது
சந்திரனும் - அம்மே
    தான்விளங்ழம் வாசலிது.
மங்களமா மலய னுடனே - அம்மே
    மகிட்சை பெறும் வா சலிது
வாசவனும் தெரிவிக்கும் - அம்மே
    வணங்க வரும்வா சலிது
பொங்கும் பலரிஷி கள்தினம்
    போற்றி செய்யும் வாசலிது
பூமக ளும்நா மகளும்
    புகழ்ந்து தொழும்வா சலிது.
சங்கரனார் திருவளமே - அம்மே
    தழைத் தோங்கும் வாசலிது.

சதுர்முகனும் முரசுதினம் தனிமுழங்கும் வாசலிது
ஆனைபரி தேர்தளங்கள் அணிபரவும் வாசலிது
அருமறை வேதாந்த மெல்லாம் ஆகமமாம் வாசலிது
வானுலவு புஷ்பக்கா லிமானம் வரும்வா சலிது
வளர்தொடு வாயூர் தினிலே மகிமை பெறும் வாசலிது
பூனலங் கொள்கெளள மாரபுத் தழைக்கும் வாசலிது
புதலமே வேதரெல்வோ (ரும்) போற்றி செய்யும்
வாசலிது

ஞானசிவகா சிவிசுவ நாதருள் வாசலிது
நயசு ரதநேச மடவார் நரமிகும் வசலிது.

வெண்பா

வாசல்வளப் பங்குறி மானிருக்கும் வேளையிலே
ஈசர்மயல் குளிர்ந்த மோகினியாள் - பேசுங்
குறமானே வாவென குலமேது தலமேது
திறமா கிசொல்லென்றாள் செறிந்து.

தருபதம்

சாதி குலம்சொல் லுகிறேன் அம்மே
தழைத்த குலம்மெங் கள்குலம் அம்மே
பேதமாக எண்ணாதே - நான்தான்
பேசுங் குறிபொய் யாதே - அம்மே
மலைதனி லேகுடி யிருப்போம் - அம்மே
மணமுயர் செந்திலை வினாப்போம்
குலவி வள்ளிக்கிழங் கெடுப் போம் - சுட்டுக்
குறவ னுறதான் கொடுப்போம்- அம்மே
தேக்கிலை யால்குடில் வளைப்போம் - அம்மே
தினந்தே னெடுத்துக் களிசமைப்போம்
மரக்கரி கலையும் சுடமானும் மயிலும்
வலை யெறிந் துகையில் பிடிப்போம்
காகம் தின்னுஞ் சாரியுண்டு - நாங்கள்
கழுகு தின்னு மிச்சாரி யுண்டு
கூகை தின்னுஞ் சாரியுண்டு -நாங்கள்
குறவரிலேமேல் குலங்காண்.

பூனை தின்னுஞ் சாரியுண்டு - அம்மே
புத்தில் அரவந் தின்னுஞ் சாரியுண்டு
பன்றிமான் முயலைத் தானும் - கண்டால்
கன்னிவலை யெறிந்து கையில் பிடிப்போம்.
வனற் பொங் கலிட்டு தேனையிறுப் போம் மொழுகி
புதுச் சட்டியில் வறுத்தி டிப்போம்.
எங்கள் குலவே லவர்க்கு - வள்ளிக்
இசைந்த கைவேத் தியம்ப டைப்போம்
கைப்பிடித் தகுறவ னல்லால் - ஒரு
கோமான் வந்தானுங் கணியோம்
இப்புவி யில்யெல் லவர்க்கு மனம்
இசைந்த படிநிசஞ் சொல்லுவோம்
மாமியார் கொழுந்த னனுடன் - யெதிர்
வாய்திறந்து வார்த்தை சொல் லோம்
இம்மை மச்சானுடன் பசப்பி - அனுதின
முபசாந் தஞ்சொல்லுவோம்
குறத்தி பிள்ளை பெத்திருக்க யெங்கள்
குறவன் காயம் குடிற்றி ருப்பான்
புறத்தி யரைக்கண் கணியோம் - சாதி
பீச்சக மல்லிகை யணிவோம்
மெச்சமுள்ள எங்களைப் போலிந்த
மேதினிக் குள்கண்ட தில்லை - இன்னம்
அச்ச மறசொல் வேனிலோ - யின்று
அளவு முண்டோ பொழுது முண்டோ

கீர்த்தி விசவாச நாதர் வளர்யிந்த
கௌளபுரி தனிலே
மூர்த்தி தரமிகும் சுரதநேச
மோகினி யேவள மையிதோ.

வெண்பா

சாதிவேள மத்தினை யுரைக்க வந்த
மாதுகு றமானேம லையெல்லாம் ஒருதனவே
அதுநேரம் கேட்டு மோகினியா ளும்வுருகும்
எளமலைகள் அறிந்ததுசொல் லுவாளே.

மலைவளம் சொல் சிந்து

கொல்லிமலை நாகமலை கோதமலை ஓடமலை
வள்ளிமலை சோலைமலை வடமலை துணையமலை

வல்லதிரு வேங்கடமலை வடமலை காளத்திமலை
சொல்லரிய மருதமலை சோலைமலை அழகுமலை

காருலவு வட்டமலை கையிலைமலை பழனிமலை
பேருலகு பன்றிமலை யிந்துமலை கெந்ததமலை

பாரிலகுள் கையில்மலை பள்ளிமலை வள்ளிமலை
நீருரவு பாலமலை நீலமலை இருடிமலை

வருணன்மலை யெங்கள்மலை மாமனுக்கு சுவாமிமலை
கருடமலை எங்கொழுந்தன்மலை கெங்கைமலை
தங்கமலை

கரடிமலை எபுருசன்மலை கணிச்சிமலை
என்தங்கமலை
வேடர்மலை யின்னமுண்டு சொல்லவோ அம்மே.

வேறு சொல்

பச்சைமலை எங்கள் கொள்பாட்டனார் மலைகாண்
பால்மலை யெங்களன்னை பரிசுகொண்ட மலைகள்.

நெச்சிமலை தனில்பிறந்தேன் திருகூடத்தில்
வளர்ந்தேன்
தென்மலையில் யென்னைக் குறவன் சேரவந்த
மலைகாண்

வச்சிரமலை சிமந்தம் ஆனைமலையம்மே - மகனை
பெத்த தலந்தானும் மணியமலையம்மே

இச்செகத்திலுள்ள தெல்லாம் எங்கள்மலை யம்மே
இந்த நீலகிரியில் நாங்கள் இருக்கும் தலம் - அம்மே

கந்த(னும்) குறமகளைக் கைப்பிடித்தான் அம்மே
கானி பல மலைகளையெல்லாம் நாங்கள் கொடுத்தோம்

மந்திரத்தைத் தேவருக்குக் கடன்கொடுத்தோம்
மாரி கேழசிக்கிந்த வடகிரியைக் கொடுத்தோம்

இந்த விசுவநாதருக்கு இரண்டுமலை கொடுத்ோம்
இருந்தயில்லும் வளைந்த வில்லும் யெங்கள்
தனமம்மே.

கலிப்பா

நலமிகுந்தகா சிவிசுவநாதர் நாதர்வளர்நன் னாட்டில்
கலைபயிலும்பைங் கிளிமொழியாள் கன்னியரே
குறமயிலே
உலகிலுள் ளமலைகளெல்லாம் உரைத்தாயேரச
முடனே
மலையிலுள் ளதிசயத்தை வன்மையுடன்
சொல்லுவாயே.

எருசக்கலை கம்போதி - தரு

சந்தன விருப்பசமு முண்டு - அம்மே
சந்தன விருட்டசகமும் உண்டு
அந்தரு மந்தர முண்டு -அதில்
ஐந்தலை நாகமு முண்டு
வண்டு கொல்லித் தாழையுண்டு - நவ
மாணிக்கச் சுனைகளு முண்டு
செண்டு மல்லிகையு முண்டு - நல்ல
செண்பக விருட்சமு முண்டு

சோதி விருட்சமு முண்டு - செம்பைச்
சொர்ண மாக்குஞ் சுனையுண்டு
சாதிக்காய் மசமு முண்டு - அதில்
சந்திர காந்தமு முண்டு
எம்பிசி னட்டையூண்டு - நல்ல
பேரிச்ச மாதுளையுண்டு
கொம்பேறும் சிங்கமு முண்டு - எலும்
மிச்சை நாறத்தை யுண்டு
காரண சிங்கமு முண்டு - பன்றி
கரடிபுலி மெத்த வுண்டு - நல்ல
சீரான மிருகம் பலவிதமுண்டு - அதில்
சித்திர குகைகளு முண்டு
தேனீறப் பரிசை போலுண்டு - நல்ல
செவ்வாது பூனையு முண்டு
தானூறு தீர்த்தமு முண்டு - அதில்
சாபத்திரி களுமுண்டு
கருநெல்லி வெண்சாரை யுண்டு - சித்தர்
பாமரசனேகம் பேருமுண்டு
கருநீலக்கொடி வேலியுண்டு - சித்தர்
காண் சுனைகளு முண்டு
புருஷா மிருகமு முண்டு - நல்ல
புத்திர நவமணி யுண்டு
மிளகு புழுகும் மெத்தவுண்டு - வேண
மூலிகை பலவிதமு முண்டு

இன்பர் கௌளை புரிவாசர் தேவர்
சிறப்பான காசி விசுவ னாதர் மகிழ்
அன்பான மோகினி மானே சொல்ல
அளவில்லை மலைவளந்தானே

கலிப்பா

பொய்யனுக் கௌளமாபுர மேவும் நன்னாட்டில்
வையகமெல் லமதிக்க வாழுங் குறமகளே
அய்யமில்லா நின்மலையில் அதிசயமெல் லாமுரைத்தாய்
தையலே யுன்னுடைய சாதித்தை யோதுவாயே.

நொண்டிச் சிந்து

எங்கள் வித்தை சொல்லக் கேளம்மே
துங்க விசுவநாதர் மயல்சுந்தர மோகினியே
பருத்தி தன்னைப்பிறை யாக்கிடுவோம் இந்திரன்
பதிதன்னைக் கண்ணாலே பார்த்தோட்டி
தருமலையை நடக்க வேவிடுவோம் - ஏழு
சமுத்திரத்தை உள்ளங்கையில் தானே யடக்கிடுவோம்
(எங்கள்)

தண்ணீர் மேல்நடக்க மருந்தறிவோம் - உண்மை
தன்னையே பேசி வைக்கத் தானுமருந்தறி வோம்தினம்
கருங்கல் லில்நா குறிப்போம் - நூலில்
தச்சபாவை தான்னடந்து தத்தியோடச் செய்வோம்

வெண்ணையுரு காதிருக்கச் செய்வோம் தண்ணீர்
விட்டுவிளக் கேற்றியே விடியளவு மெரிப்போம்
விண்ணுலகில் தினமும் போய்வருவோம் ஒருவர்
பருவதங் களையும் பறக்கச் செய்வோம்
(எங்கள் வித்தை)

எண்ணி சாவாத வித்தைபடிப் போம்பீரங்கிக்
கெதிர்கவந் தகுன்டை யேந்திக் கை யில்பிடிப்போம்
மலைகளை யேலக்குக்குப் போடச் செய்வோம் - ஒரு
மருந்துண்டு திலகமுடன் மனிதர் தெரியாது
சிலரைக் கரவித்தை மெய்யே - பெண்கள்
சேறாத புருஷரைச் சேறவொரு நெய்யே - எங்கள்
வலியபுலி தொடர மருந்துண்டு கரு
மணலைக் காயறகா வேவருத்து வோமென்று
சிலமே ருக்குள் காசிவிசுவநாதர் - அருள்
திருவுள மறியவே வரவித்தை யாமே (எங்கள்)

கலிப்பா

மேதினியோர்க் கருள்தழைக்கும் யெங்கள் விசாலாட்சி
மதன கொளளகாசி விசுவேசர் நன்னாட்டில்
சாதிவித்தை யோதிவந்தாய் தாட்டீக குறமகளே
சேதியுடன் யறிந்ததே சமெல்லாஞ் சொல்லுவாயே.

மத்திய மாதி சிந்து

கொங்கணம் டில்லி ஆசியம் யாழ்ப்பாணம்
கொச்சி மகதம் பிச்சிய கலியாணம்

சிங்களம் கொல்லி மாளுவம் சாளுவம்
சிந்து லாடம் கருநாடம் காடகம்
அங்கேயம் விந்தியம் ஒட்டியம் ஆந்தையாடகம்
கொங்கு பாஞ்சாலம் வங்கம் வங்காளம்
காஷ்மீர் நிடதம் செஞ்சி சோழம்
வெண்ணாடு பாண்டிசீனம் கொழும்பு
மாருடம் தஞ்சை கோசலைமக்கம்
பறங்கி சாலிக்கிராமம் கோவை கொழும்பு
அச்சிவிலாடம் கோங்கு குலுங்கு இலங்கை
காச்சிமீர் வங்காளம் அய்யோத்தி துவாரகை - கேரளா
மெக்கா வெருணயிந்த தேசம றிவேன்
விரதமயல் போக சுரத மோகினியே

கலிப்பா

வையகத் திற்காசிவிசு வேசர்நன் நாட்டில்
செய்யவொரு குறமகளே சேதியெல்லாம் ஓதினாய் நீ
மெய்யுடனே சொன்னகுறி குணங்களெல் லாம்நோக்க
மெச்சியிந்த
வையகத்தில் வாங்கிவந்த வரிசையெல் லாஞ் சொல்லு
வானே.

பந்த வாடி தரு

குறிசொல்ல மெச்சி தந்தார் - துரைமாதர்
குறி சொல்ல மெச்சி தந்தார்

சீர்புகழ் காணசிவ காசி விசுவேசர்
சித்தமயல் முத்துமோ கினியே கேளாய் (குறிசொல்)

அட்சய மாகவே தெட்சிண தேசத்தில்
ஆடகம் பாடகம் சூடகம் கொங்கணர்
பட்சமுடன் குறிலெட் சணமாய் நல்ல
பட்டுமுலைக் கட்டுகள் தட்டு மோதரம் (குறிசொல்)

உச்சித மாகவே வச்சிரத் தளுக்குடன்
ஒலையும் சேலையும் மாலையும் மகதர்
பச்சைப் பதக்கமும் கொச்சிக் கடுக்கனும்
பதிச்ச காதிற் முத்துச் சரத்துடன் (குறி சொல்)

இத்தனை வெகுமான மல்லாம லும்பின்னை
இன்னமு முண்டு நான்சொன் னது பாதி
வித்தக ராம்சிவ காசிவிசு வேசர்
வீர தலவளர் சுரதமோ கினிகேள் (குறி சொல்)

வஞ்சி விருத்தம்

தாரார் குடமாமு லைமானே தரமெல்லாம்
பலர்க்கும் குறியு ரைத்தும்
தோரா வரிசை பெத்த தெல்லாம்
சொன்ன யதனால் மகிழ்ந்தேன் காண்

வாராய் மயிலே யென்மனதில்
மருவுங் கருமம் குறிபார்த்து
நேராய்ச் சொன்ன யாமாகில்
நிசமாய் வரிசை தருவேனே.

வெண்பா

தருமெனக் குறியெச் சரம்பார்த்து ரைக்க
அருமைக் கடவுளைப் பாவியே
சீர்ச்சுரத மோகினியாள் சென்று மயலாற்
சிலாக்கியமாய்ச் சொல்வாளே தான்.

குறிசொல் சிந்து

சூமாரி யம்மே யேழுரி யம்மே
சுத்த மானவரே கறுத்தா னவரே
காமாரி யம்மே மாமாரில் லையே
கந்தனே மெய்யே முத்தவாய் அய்யே
பூமாரி தூவியே மேவும் தேவியே
பெண்வள்ளி மானே யென்தெய் வயானே
குமாரி யெனவே தேனான தமிழே
குறியோதும் பொருளே திறமாதி யருளே.

சிந்து

மானே மலர்த்தேனே நெசமான மோகினியே - வரு
ஈசனை மயலாகின சுரதமோ கினியே
நானே சொல்லுங்குறி யானதை - கண்றாகவே

கேளாய் நன்மை தானே - வரு
மென்மொழி உண்மையாம் விழிவாளாய்
ஓடிநீ ராடிக் கொண்டுவாடி யென்னம்மே
உடுத்தோர் சேலைமறுத் தோர்தலை உடுப்பாய
டியம்மே
நீடியெண் குலவள்ளியைப் படினினை யம்மே
நிலைக்கோர் மணம் பெசகுங் குறி
சொல்லக் கேளடியம்மே
தரையில் பன்னீர் தெளித்துமெழுகிநீ சாந்தாலே
சந்தனத் தால்கோல மிட்டு தாமரைப் பூப்போல்
அரன்மகனாம் கெணபதியை அவ்விடத் திலுண்டாக்கு
அறுகாசி சிரமதிலே அழகுடனே சூட்டு
பச்சரிசி தேங்காயும் பயற்கடலை அவுலும்
பருப்புடனே நல்ல வெல்லம் பாங்குடனே படையும்
நிறைநாழி முத்தளந்து நிறைப்பி முனனே வைப்பாய்
நீறுமிங்கே வந்து நின்று நினைந்து கையை வைப்பாய்
கறுப்பு தெய்வம் குறுக்கே வந்து கைதட்டுது பாராய்
வட்டி ரெண்டாட்டு குட்டி கொண்டது
வெட்டி யங்கிட்டு நேராய்
காவிப்பூதம் தாவிப்பத்துச் சேவல் சேர்க்குதம்மே
கண்டவர்ணப் பொங்கலைக் கொண்டாடு
வேங்குதம்மே
கூவிக் கொண்டு குலதெய்வங்கள் சொல்லியேங்
குதம்மே

குட்டிக் சந்தொடு ரெட்டைப் பன்றிகுட்டிதான்
குடுமம்மே
கொட்டுக்கால் பேய்க்கு யெட்டியேரெண்டு பெட்டைச்
சேவல் யெடுத்தெறி
கூத்தனுக்கும் காத்தனுக்கும் போத்தல்
பொங்கவைக்குறி
முட்டியே வந்த நெட்டைப் பேய்க்குச் சளட்டைச்
சாராயமங்கே வை
முகந்த கண்ணை பிசைந்த ரெண்டு
முட்டைகேட்குதோ சலகை
குட்டி தெய்வங்கள் கொட்டுக்கே பதினெட்டுக்கும்
பொடி போடாய்
கோயில் காத்தவராயனுக்கொரு நீலப் பூமாலை சூடாய
அட்ட பயிரவர்க்கிட்டமாய் பொங்கல்
எட்டு மூலைக்கும் போட்டாய்
அட்டிக்கே யொருமொட் டைப்பேய் வந்து
ஓட்டுக்கேக்குது பாராய்
அறிந்தேன் சொல்ல மறந்தே னம்மே
அருளவெனக் கொடுமகன் அய்யப்பன்
மட்டி மெய்யப்பன் படிநெய் யப்பந்தனை வாராய்
கூறுந்தெய்வங்கள் கூறுந்தேவதை - குகனாம்
ஆறுமுகனாம்
கொம்மை முலையம்மை வள்ளி
கொரு காணிறக்க தவாய்

அருகன் தமிழ்முருகன் - எங்கள்
மருகன் வடிவேலன்
அடியிணை அன்புடனே தொழும் வடிவும் செங்கை
காட்டாய்

முருகு குழல் வள்ளிதனக் கருகன் வடிவேலன்
முளரிப் பதங்களைக் கூப்ப வளரும் செங்கை காட்டாய்

ஆனந்த பைரவி பதம்

பல்லவி

தன தாணிய ரேகையிது சந்தான ரேகை

அனுபல்லவி

சங்குசக்கர ரேகையிது டெமருக ரேகை

சரணம் 1

சீதை கையில் யந்த மச்ச ரேகையதி னாலே
சீராமன் தன்னைக் கூடி சேர்ந்தார் காண் - அம்மே
பார்வதியாள் இடது கையில் யிந்த - பதுமரேகை
பாதியுல வர்க்களித்துப் பரமசிவன் வாழ்ந்தார்

சரணம் 2

இந்திராணி செங்கையிலே யிக்குறும ரேகை எங்கள்
இந்திகையில் இக்கங்கண ரேகை
சந்திரமதி அருந்ததிகை தாரை தன்ரேகை
சரசுவதியாள் கையிலிந்த சகலகலாசரகை

சரணம் 3

இந்தயிந்த ரேகையெல்லாம் யிருக்கு துந்தன் கையே
ஈசர் கையிலாசர் உன்னையிணங்கு வாரடியம்மே
பாய்ந்த சொல்லு விந்தை கிள்ளை பலிக்குமடியம்மே
பளபரளனச் சொல்லுங்கெளளி பலனாமடியம்மே

சரணம் 4

வடதிசைபோ னச்சனவே வற்றாது பலனுண்டு
வாசர் விசுவேசர் யிங்கே விருவில் பலமுண்டு
இடது கண்ணும் இடதுபுறமும் துடிக்குதம்மே பாராய்
எவர்க்கும் பலிக்குமிது என்னை மறவாதே

சரணம் 5

பவணி கண்டு மயங்கி விழப்பரவசமே தவிர்வாய்
பரமனுடன் பலநாளும் ஒருமையுடன் வாழ்வாய்
அவனிதன்னில் பலர்க்குங்குறி அறிந்தோ தினேனம்மே
அன்பர் நாதர் விசுவருன்னை அணை வாரடியம்மே

விருத்தம்

இணங்குவார் பரமனென்று யியம்பிய மொழியைக்
கேட்டு

மணங்கமழ் கெந்தம்கூட் டிவரிசையா பரணமாடை
குணங்கமழ் சுரதமயல் கொடுத்தாள் குறத்தி வாங்கி
அணங்கிளை வாழ்த்திப் போத்தியங் குவாழ்ந்திருந்
தாளன்றே

கலிப்பா

அன்று விசுவேசர் அருள்சுரத மோகினியாள்
சென்று மயலாற் செழிமலர் மேடையிலே
வென்றி யுடனேகூடி விரகமதில் மனதுடனே
நன்றி யுடனேமோ கநாயகிவாழ்ந் திருந்தனளே.

விருத்தம்

வாழ்த்த மானிருந்த காலைவை குந்தம யானம்
பூத்த தாமரைக் குள்வேதன்புர வாகினி யைத்தேடி
கோத்திரம் பாடிக்கொண் டுகுலாவி யேநடை நடந்து
சாத்திரக்கு முவனாகி தளுவர நியமித் தானே.

விருத்தம்

மிக்குயிர் கொடுவா யூரில் மிகுந்த கௌளபுரத்தில்
எக்கணம் காசிவிசுவ நாதர்தன் சபையை நோக்கி
சொக்கிற கணிந்த சிலகோவு மேகையி லேந்தும்
திக்கெலாம் கீழ்சிங் காரசிங் கனூர்தோன் றினானே

தருச்சொல்லு

திருத்தமாம் கீர்த்தி விளங்கும் சொல்வர் கௌளபுரத்தில்
மருத்தன் சிங்கியைத் தேடிமாலை சிங்கன்
தோன்றினானே
கப்புச் சல்லாமு டையுடுத்து கன்னிவலை கயறெடுத்து

குறும்புக் கள்வெறியெ டுத்துகிழ வனும்வந்து
தோன்றினானே
சரிகையுறு மாலைகட் டும்சந்திர நுதல்தில தப்பொட்டும்
குருதருகுத் துக்கோலும் கொண்டுகிழ வனும் வந்து
தோன்றினானே
கொக்கிறகும் வைக்குந் தோளும்கடர் வலயம்
கைவாளும்
மைக்கண்சிங் கியைக்கா ணாமல்ம லைசிங்கன்
தோன்றினானே

வேறு சொல் சிந்து

சல்லடை கள்கட்ட கூடைகள் கட்ட
சாம்பல் முறங்கட் டசிப்பில் கட்ட
பலவகை நாளும் சூரியுங் கொண்டு
பாடிக் குறவனும் தோன்றி னானே
கடுவிஷ மதிர்க்க காதுகள் வைக்க
கண்ட சிரங்கு பலமிணி மாற்ற
பெடிமருந் தெண்ணைக் கஷாயமுங்கொண்டு
உந்திக் கிழவன் வந்தனய்யே
சோகைப்பல்லும் பாகச் சொல்லும்
துள்ளு மீசையும் கள்வெறியும்
மோகபென் சிங்கியைத் தேடி
மோகன சிங்கனும் தோன்றினானே
கௌளபுரத் தில்வாசர் கீர்த்திகாசி விசுவேசர்
சீரான சமூகந்தே டிசிங்கனும் தோன்றிவந்தனய்யே.

விருத்தம்

வந்தனையுடனே யன்பர்வணங் கும்வாழ்காசிவி சுவேசர்
சந்தண மருவும்திவ்வியசபை தனில் சென்று வாழ்த்தி
சேர்ந்தனன் சிங்கிதன்னை செகமெல்லாந் திரிந்துந்
தேடி
வந்தனன் கிழவன்கண் ணிவைக்க வேநோக வுத்தன்

விருத்தம்

வருகிறபடி வைக்கெல்லாம் வகைவகை கண்ணி
கொண்டு
தருமிடைக் கயிறுந்தோ ளும்கட்டின கையிலரி
வாளேந்தி
கருவுரு பிரமன்வாழ் கௌளபுர மிகும் ணன்னாட்டில்
குருமணிச் சங்கும்பூ னும் கிழ வனுங்கண்ணி வைப்பான்

தரு பந்தவாடி

பல்லவி

பொருபெரய்யே பேசாரே பொருபொரய்யே
பொருபொருயிரு அய்யே

கௌளபுரத் திலவரும் விசுவேசர் வயலுள்ளே
முகத்தில் காகமும் முக்குறி நாரையும்
முட்டியொட் டியொட்டி தட்டிப்பட் டுதொட்டு

பெரினுமய் யேகையில் சிக்கிபெரி னுமய்யே
பெரினுமய்யே காசி விசுவேசர் பெரிய
ஆலடி வயலுள்ளே கொக்குள்கயர் கொக்கில்
திக்கிச்சிக் கிப்புக்கிப் கிக்கிசிக்கி கிக்கி
என்று மெத் தபார்த்திரு மய்யேயின் பங்கூடி
பாத்திருமய் யேபாத்திரு மய்யே
கையில்சிக் கிபெரினு மய்யேபெரி னுமய்யே
கௌளபுரத்தில் வாழும்விசுவேசர் வயல்வுள்ளே
பலபல பறவைகள் கண்ணியில் பட்டு
உதரவு தறமெத்த பரவசமாய்ப் பட்டு
கெஞ்சுது ரய்யேகாங் கீழ்கெஞ்சு துரய்யே.

விருத்தம்

பெரியமிரு கம்பட்சி பிடித்து நான் கொண்டு வந்தேன்
பேரியல் புயரம் காசிவிசுவே சர்வாழ்நன் நாட்டில்
சாரியாய் பறவை யெல்லாம் தனித்தனிபா கம்செய்தே
சேரியல் புயரம் தீர்க்கும் சிங்கியைக்கண் டேனையே.

பொன்காசி விசுவேசர் வயல்வுள்ளே
மிருகமும் பால்குரு இனங்களும்
மெத்த மெத்தச் சுற்றிதத் திக்கத்திக் கொண்டு
வருகுதய்யே பறவைகள் வருகுதய்யே
வருதுதோர் தாராவும் செங்கால் நாரையும்
பெரியதோர் கொக்குடன் கானாங் கோழியும்

பெருகுரு தெற்குக்கரை யோரம் பதுங்கிப்
பொருத்திக் கண்ணியைத் திருத்தி ரெண்டய்யே
தும்மாரே ரய்யே நின்னைச்சென் றுதும்மாரே ரய்யே
தும்மாரே யெந்தன் தும்பிடுறே னையே
கமழ்விசு வேசர் வயலுள்ளே
கெம்பாரே மக்கி களகும் போடப் போகுது
செம்பாக வேகண்ணி தரித்திரண் டையே
திட்டாரோய்யே பேச்சப்பேசி திட்டா ரோய்யே
திட்டா ரோய்யே கௌளபுரத்தில்
திறமேவும் விசுவேசர் வயலுள்ளே
சிட்டுக் குருவி வந்து ஓட்டையை
எட்டி எட்டி மெட்டி மெட்டி
தட்டிக் கட்டுப்பட்டுக் கொண்டு
பிக்குமய்யே வலைகோழி பிக்குமய்யே
பிக்குமய்யே
காசிவிசு வேசர்பெ ரியசூவடி வயலுள்ளே
போத்துங் குருவிகளைச் சேர்த்து வலையிலே
கத்திக் கத் திக்கொண்டு பார்த்துப பாரத்துடன்
வருகுரு தய்யேகண் ணியில்பட்டு வருகுருதய்யே

சங்கரா பரணம் - தரு

கொங்கைதங் கக்குடத்தே னைகுவளை விழியிசை
மானை
எங்கும்யெங் கும்தேடினே னேயெந்தன் சிங்கியைக்
காணேனே

செட்டிவறுத் தகபாலரே சிங்கிவாக் கண்டில் லையோ
அன்னமும் நித்திரையில் லையந்தி பகல்தோ ணுதில்லை
என்னசெனய்மிதுதொல் லையென் சிங்கியிங்கே
வரவில்லை
தும்பிடுறேன் தும்பிடுறேன் சொன்னவர்க்கு தும்பி
டுறேன்
முன்புநரி கொம்பு தாரேன் மோகச்சிங்கி யிங்கே
வரவில்லை
கண்டுவந்து சொன்னார்கை யைகாலைக் கும்பிடுறேன்
செண்டுமுலை ரெண்டுமய்யே தேடியுங் காணேன்
சிங்கியை
மத்தொருபே ரைச்சேர்ந்தா ளோவலிய வரைக்கை
கொண்டாளோ
இத்தரையில் யெங்குற்றா ளோயென்சிங் கியிங்கே
வாராளோ
என்றுகாண் பேன்னாடியே அய்யே - எந்தன்
மோக கண்ணாட்டியே
கண்டழைத் துவந்தார் கையேகாண் வசிகம்தா
ரேன்மெய்யே
பத்தரைக்கழு தைக்கையே பரிசமிட்டுக் கொண்டே
னய்யை
சித்திரக் கொண் டைக்காயை தேடியுங் காணேன்
சிங்கியை
கௌளபுரத் தில்வாசர் கீர்த்திகா சிவிசு வேசர்
பொருளினா லேனேசப்பெண்கொடி வாராளோ

விருத்தம்

பேசியெங்கெங் குமோடி பெண்கொடியைக் காணாமல்
காசிவாழ்விசு வனாதர்கம வமல்லடியைப் போற்றி
தேசதேசங் கள்தோறும் திரிந்துமே நடந்துவாடி
வாசமுமாலை யாள்சிங்கி மான்தனை தேடிவந்தே
னய்யே.

விருத்தம்

விருந்துமன் பவர்க்கேநம் பர்வார்காசி விசுவனாதர்
இருந்தருள் கொடுவாயூர்க் கிசைந்தகொளள புரத்தில்
குருந்தெனு முலையாள்சிங் குகூடியேயெந் தனுக்கு
மருந்தையிட் டளவையெல் லாம்வகையுடன்
சொல்லுவேனே.

மருந்து சொல்லகவல்

கேளாய் அய்யே கேட்ட பேர்க்கெல்லாம்
நாயிரஞ் சொன்னாலுந் துலையாது காண்
நன்னாரி கண்ட நாரத்தை தும்பை
பொன்னாங் கண்ணி புன்னா யுருவி
வண்டு கொல்லித்தழை மாதனை கோவை
இண்டு இசங்கந்தா ழையெலந்தை யாவானா
சிறுகாஞ் சோறிசிலந் திக்கொடியும்
அறுகு பெரண்டை அழுதோர் கண்ணி
தவிசி முருங்கை சாறடைத் தகரை

துவரை பொலும்பில் துளவி கிருவை
கருவூ மத்தை கஞ்சாங் கோரை
திருகு கன்னி சிவனார் வேம்பு
துத்தி செம்முள்ளி துதுவ ளையும்
பிற்றின் பசலை பேய்க்கு மட்டி
கிணத்தடிப் பூலா கீழக்கா னெல்லி
மணத்திரு கிலுப்பை வட்டக் கிலுப்பை
கொடியடிப் பரட்டை குடகப் பாலை
செடியடி முன்னை தேத்தடிப் பூண்டு
எட்டிக் கொழுந்து விட்டுணுக்கி ராந்தியும்
தொட்டால் சுருங்கியும் யெட்டால் குணந்தரும்
ஆணை வணங்கி அரசு பூவரசு
பூனக் காலி புளிச்ச வல்லாரை
ஆழின் பிசினும் அத்திக் கொழுந்தும்
பாலைய தண்டை பருநீலப் பரண்டை
நீர்முள்ளி கற்றி நெரிஞ்சில் புல்லுருவி
வேர்சிறு கீரை வெள்ளரி யாரை
பச்சிலைச்சாறு பலபல விதமாய்
உச்சியோர் வசைக்கு ஒருபடி அளவாய்
கண்ணியமாய்க் கூட்டுங் கடைச்சரக் கெல்லாம்
இன்னமே கொஞ்சம் இயம்புவேன் கேளீர்
நாகப் பூவம் நாய்க்கடு கேலம்
கூகை நீறும் கொடுக்காய் பிசினும்
பொன்னரி தாரம் பொரிவெண் காரம்

கன்னார் திப்பிலி கடுகு ரோகினி
சுக்கு கிராம்பு சோதி கடுக்காய்
மிக்க மிந்துப்பு வங்காளப் பச்சை
கருஞ்ச முளகு ஓமம் லவங்கம்
சகந்திர பேதி தாளி சபத்திரி
முகத்ததி மதுரம் முதியார் கூந்தல்
பேரா முட்டி பெரினா வல்பூ
வாரியுப்பு மரமஞ்சள் பட்டை
சித்தா முட்டி செவ்வள்ளிசெவியம்
பித்தெழுங் கஞ்சா பேரிச்சல் மாஞ்சில்
பெருகுங்கில யும்பேய்ப் புடல்வி ரையும்
கோட்ட மாம்களச் சிகூற ரிதாரம்
ஓட்டுக் கடைச்சரக் கோராயி ரமாம்
சீவன் பேரைச் செப்புவே னய்யே
கூகையும் கண்ணும்குலா ணாற்கை மண்ணும்
தாக விஷமும் நாபி மதமும்
ஆனை மதமும் ஆட்டின் கொழுப்பும்
பூனைப் பாலும் புலினகத் தழுக்கும்
பறத்தின் முட்டை பச்சோந்தி வாலும்
குரங்கின் மண்டை கூடிய மதமும்
தூக்கினாங் குருவி சொறித்தவ ளைக்கண்
பாக்கினம் புழுவும் பசும்பாம் பெலும்பும்

தரு

மைக்குழல்கோ தீமதுமாலை சூட்டாமல் - அய்யே
கிச்சும்மா யவையகந்தன் னில்யிருகண் ணும்வீணாச்சே
- மெய்யே
வந்தனம் கொண்டவள் யெந்தனைக் காட்டாமல்
- அய்யே ஒரு
மோடியுடன் தரதாடனம் கொள்ளாமல் அய்யே - மேனி
முதுகுபிடறி யெங்கும் மதமாகிச் சோருது - மெய்யே
நின்றவுடன் அவள் சோட்டுப்படாமலே - அய்யே தலை
திருவியே கொட்டாவி குறுகுறுப் பேறுதுமெய்யே
தட்டுக்குத் தட்டுதிறம் சொல்லிவை யாமல்அய்யே -
தலை
மயக்கங்கொ ண்டுசுற்றி வீழ்குறேன் ஆழ்கிறேன் -
மெய்யே
பாராளர்மெச்சிய கௌளபுரிதன்னில் அய்யே - யிந்த
பரமன் காசியீசர் சமூகத்தில் வாராளோ - மெய்யே
காரேழும் குழலியைக் காட்டித்தந் திரணிலய்யே -
பெண்கள்
கண்டு மயங்கும் மருந்துண்டு நான்தானே- மெய்யே

சோதனைச் சிந்து

வந்த கார்முகில் தொந்தருளும் முந்தன்
கூந்தல் சரிவானேன் சிங்கி

வண்டு மலரின் மது வுண்டுடன் மதிக்கவே
மருகுழல் சரிந்ததடா் சிங்கா
கலகவா ளிருவிழிக் காமினியே யுந்தன்
திலகமழி வானேன் சிங்கி

நிலவென் ரெழுத முன்னவே - நினைந்து
சகோதரமீன் னெத்தியைத் துடைத்துதடா - சிங்கா
அருவாயே மோகனமே யெந்தன்னா ருயிரேவுன்
இருகண்ணும் சிவப்பானேன் - சிங்கி
பருவப்பெண் களுடனே ஒருமைச் சுனையாடவே
பார்வைகள் சிவந்துதடா - சிங்கா
வாசிக்கும் யௌம்புல் பாசுக்குந் துமணிபோல்
நாசிக்குத் தளுக்கேதடி - சிங்கி
ஆசைதம யந்திக்கு வாசிக்கு குறிமெச்சி
அடையா ளம்தந்த தடா - சிங்கா
பண்டிளங்க முகில்பொன் வண்டிருனிறம் போலே
கண்டமதில் யென்னடி - சிங்கி
அண்டுபார் வதியிடம் சென்று குறி மெச்சி
அடையாளச் சாமிதடா - சிங்கா
காண்டாமிரு ககொம்பை சுண்டாடி வளர்ந்துந்தன்
கையில் அளித்ததேதடி - சிங்கி
ஆண்டலட் சுமிகொண்டு வேண்டிய குறி சொன்னேன்
அளித்த கடசுமிதடா - சிங்கா
பந்துமுலை யில்யிளம் சந்திரனு தையம்போல்
பதித்தகுறி தானேதடி - சிங்கி

அந்தரத்தி லேசக்கிர வாகந்தன் னினமென்றும்
அடுத்துடன் கிழிற்றுதடா - சிங்கா
சித்திடையில் வுடுத்தவத் திரம்நனைந் தெங்கும்
சேர்ந்தவா சனையே தடி - சிங்கி
கருத்தனான வுன்னை கண்டவுட னேகாம
களசோப மானேனடா - சிங்கா
பூசும்கெந் தவடி வும்வாசப் பரிமளம்
புனுகு முனக்கேதடி - சிங்கி
ஈசர் கௌளபுரி வாசர்மக ராசனும்
இன்றெனக் களித்ததடா - சிங்கா
முத்துநகை யேயுந்தன்நெற்றியில் மணக்குறி
வற்றவகை தானேதடி - சிங்கி
கருத்தனென் னும்காசி விசுவேசர் பாதத்தை
கண்டுபணிந் தேனடா - சிங்கா.
சிங்கி சிங்கி யென்றுயென் னுடன்பேசி பேசிவுன்
இங்குதக்கள வுகள்யெல் லாம்நான் அறிவேன்
அறியாமல் நான்தான் ஒண்டிபாரதம் செய்தாலும்
பிரியமாகிக் கொண்டால் பெருமையல் லவோடி
ஓடிமுன் குறத்தியுடன் கூடியென்னை சண்டை
முட்டிப்போட்டாவுன்னை முகம்பார்ப் பேனோடா
ஓடியெங் கெங்கும்தே டிவுன்னை நினைந்து
வாடிமெத் தமெலிந்த தெல்லாம் மயல்பட்ட
தல்லவோடி
பட்டங்கம் பேசுமுந்தன் பலத்தகா ரவே குற
பொட்டியாலே யெட்டிப் போடவோ பயலே

பயலென்று சொல்லுவதும் யெந்தன்பாகி கியமல்லவோ
மயனுள்ள விட்டத்திலே பருமபோப மல்லவோ
அல்லவென் றுபலவந் தமாகி ஆசைகுறிச்
சொல்லவந் தாயேயொரு சோட்டுப் போடவோடா
போடாபோ டாவென்று புகழாமல் - யென்னை
வேண்டும்தடி தான்கொண்டு நீயடித்தால்
சகிப்பேனடி
சிங்கி சிங்கியென்று சினுங் கிமெல்ல மெல்ல
கொங்கைரெண் டைத்தொடக் கூடுமோ கிழவா
கூடக்கூடச் செய்தகுத் தந்தீர வுன்னைப்
பாடிப்பா டிரெண்டு பாதம் பிடித்தேனே
பாதம்பிடித் தவுடன் பலபிழையா னாலும்
யேத்துக்கொண் டுபொறுப் பீர்பெரி யோரே
பெருமையா கயினிப் பலபிழை யானாலும்
ஏத்துக் கொண் டுபொறுப் பார்யிதம் பெரியோரே
பெருமையா கயினிபிரி யமுடனே கூடி
மருவியே நாமினிசேர்ந் துவாழ்ந் திருப்போமே

விருத்தம்

பணிந்தவர் தம்மைக் காக்கும்
பார்வதியும் மோர்யிடம்
துணிந்தருள் சிறக்குங் காசி
விசுவேசர் வாழும் நன்னாட்டில்
பணிந்த ருள்முலையாள் சிங்கி
மன தெல்லாங் கண்டே னய்யே

துணிந்துடன் மருவிக் கூடி, துடர்ந்து
நாமினி மருவு வோமே.

ஏசல் தரு

சிங்கியுன் பாதத்தைக் கும்பிடுறே னய்யே
இங்கித முடன்கூடி இணங்கவே வாடி
இணங்கவா டியென்னும் யிளம்பயித் தியமானால்
கணம்போதும் பேசாதே கொழுப்பான குறவர்
கொழுப்பென் னச்சும்மா கோபம்வேண்ட டாமுந்தன்
அழுப்பு நான்தான் ஆழ மோசி
புங்கடி னண்டும் பொன்னிற வண்டும்
சங்கடிப் பூச்சி சரவர வுடனே
மடவாக் கிளியும் மறட் டியர் முக்கு
கொடைக் கிழங்கும் கொட் டைச் சாந்தும்
இத்தனை மருந்தும் யெடுத்து தடப்போய்
வண்ணான் பாறை வலமுடன் வந்த
கண்ணாள் பத்திர காளியைப் போற்றி
நீரும் பூட்டி சுத்தியாய் தூபம்
தீபம் கொடுத்து பலபல வகை
கைவேத் தியஞ்செய் துதவ ளருளால்
கருப்பஞ்சா றுவிட்டுதேள்க் கியெட்டுநாள் அரைத்து
பெலக்கப் பிழிந்த பெருஞ்சா ருடனே
கலக்கிக் காச்சி கடிதாய்க் குறுக்கி
பலபல வுருண்டை தினைய ளவாகா

தொட்டியுருட்டி சிலவாய்க் கட்டி
நிலத்தி லொன்பது நாள்நிழ லாயுலத்தி
காளி கோட்டம் கனபலி பீடம்
ஆழ வந்து ளரியருச்சித்து
ஆழ வெட்டி அதைப்பு தைத்து
ஒருநாள் பிறகு எடுத்தே மருந்தை
செப்ப மதாக தெய்வ முன் வைத்து
முப்பூசை யுமேமூ ழக்கிக் கொடுத்து
வாக்கிலும் காட்டி வத்துடன் சிங்கி
பாக்கிலும் சோற்றிலும் பலசொல் வகையிலும்
உறவாய்க் கொடுக்க உள்ளமே மறக்காமல்
அறைநா ழிகை தான் அவளைப் பிரிந்தால்
ஒருயுக மாகிஉள் ளமே தளர்ந்தேன்
தருமான் காட்டித் தருவீ ரய்யே

கலிப்பா

தருவிளங் கும்காசி தழைத்த விசுவேசர் நாட்டில்
திருவிளங் கும்வடவ மென்சிங் கியுடனே கூடி
கருவிளங் கும்போக களிப்புட் னேயான் மேவி
மருவிளங் கும்சேதி வகைவிரு துசொல்லு வேனே

விருத்தம்

சுகமுடன் யெல்லோர் வாழிதுணை தரும்கரு ணையீசர்
நகர்கை லாசவிசு வாசநாதர் வாழ்வுறு மன்னாட்டில்

சேகமெல் லாம்நடந் துவந்தேன் தேன்மொழி சிங்கி
தன்னை
அகழ்திகழ் வுடனே கண்டடை யாளந்சோ திப்பேனே

விருத்தம்

திருப்பா யில்சிங்கி தானும் சிங் கனைச்சேர்ந் துகட்டி
பொருப்பா யில்குடிலே பூந்துபுள கிதலீலை யாடித்
தருப்பா யில்வாழ்ந் துநாமிருவ ரும்சந்தோ ஷமாகவே
தான்
யிருப்பா யில்சத்திய லோகம் தேஇ கிவாழ்ந்திருந்
தாளன்றே.

வாழீ

தாரணி வாழிதரு மம்மறை யும்வாழி
ஏறணியா றுசாத்திரம் யீரெண்புரா ணம்வாழி
சீறணிதொண் ணுத்தாறு தெய்வதத்து வமும்வாழி
ஆறணிப லமாம்சை வக்கிரகங் களும்வாழி
இந்திரன்தே வர்வாழியெ முமுறைமே கம்வாழி
சந்திரன்யிர விவாழிதா ரகைகுனங் கள் வாழி
மந்திரம் வாழிகாசி சிவாலாட் சிதா னும்வாழி
கௌளபுரத்தில் மேவும்செனங் களெல்லோ ரும்வாழி
மேலவளர் வல்லிகாசி விசுவநாயக ரும்வாழி
மேலவளர் தெய்வயானை வள்ளியம் மன்தானும்

சுபமாம்சுப் பிரமண்ணியர் சுபமுடன் வாழிவாழி
பேருள்ள வேட்டைக் கொருமகன்
பெருமையாய் வாழி வாழி
ஆரியன்கா வில்வாழும் தருமசாத்தா வும்வாழி
ஈசருடன் துணைக்கண்ட யே;ஸவரிபக வதியும் வாழி
தருவுடன்யென் னைப் பெத்த தாய் தந்தை யருவாழி
மெய்க்கண்ட விசுவேசா நன்னாட்டில்
பதினேழு நாட்டில் சமுகங்களும் வாழி
அன்புடனே யெங்கும் வாழுமிருந் தவபத்தர் வாழி
அய்யன்விசா லாட்சியுடன் அன்புடன் வாழி வாழி

வேல் முருகன் துணை
ஹரி: ஓம்: சுப்பிர மண்ணிய சுவாமி துணை
கௌளக்குறவஞ்சி சகாயம்
கொளளக் குறவஞ்சி முற்றும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பின்னிணைப்பு

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

பாடல்	பக்கம்
அவனி	7
அன்று	42
இப்பல	15
இனங்குவார்	41
எங்கள்	33
என்னுயிரே	13
காவல்	12
கிளிமதனன்	19
குறத்தி	21
குறிசொல்ல	35
கூவாதே	18
கேளாய்	48
கொங்கனம்	34
கொங்கை	46
கொல்லிமலை	29

சந்தனம்	31
சல்லடை	43
சாதிகுலம்	27
சாதிவேள	29
சிங்கியுன்	55
சுகமுகடன்	56
சுரத	9
சூமாரி	37
செந்திவாழ்	17
செந்திருவாழ்	9
தங்கநவ	26
தருமெனக்	37
தருவிளங்கும்	56
தனதாணிய	40
தாரணி	57
தாரார்	36
திருத்தமாம்	42
திருப்பாயில்	57

தூதினங்	22
தோன்றிடும்	13
நலமிகுந்த காசி	16
நலமிகுந்த காசி	31
நரைத்த	12
நடம்புரி	19
நாரண	6
நாடெல்லாம்	24
நாட்டுனிற்	25
பச்சைமலை	30
பணிந்தவர்	54
பரசுப்	9
பாரும்	10
பெரியமிருகம்	45
பேசியெங்கெங்	48
பொய்யனுக்	33
பொருபெரய்யே	44
மயங்கிய	10

மானே	37
மிக்குயிர்	42
மேதினியோர்க்	34
மோகமானே	17
மைக்குழல்	51
வஞ்சி	22
வந்த	51
வந்தகார்முகில்	51
வந்தனையுடனே	44
வந்தாள்	23
வருகிறபடி	44
வாசல்	27
வாழ்ந்த	42
விருந்து	48
விற்கமனே	15
வீதிகள்	5
வையகத்	35